ஜனநாயகத்துக்கு மாறான, பிரதிநிதித்வமற்ற சர்க்கார்

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (25-11-49) | வெளியீடு (26-11-49) | இதழ் 100

இந்திய நன்மைக்கு இதனைக் கலையுங்களென்கிறார் லோகியா

கண்ணீர்ப்பெருக்கு இங்கு: கடல்கடந்து கோலாகலமா!

சரியும் ஸ்தாபனத்துக்கு சப்பைக்கட்டு ஒரு கேடா?

"இந்திய சர்க்கார் என்ற பெயரில் இப்போது ஆட்சி பீடத்திலமர்ந்திருப்பது தினைத் துணையும் பிரதி நிதித்துவ மற்ற சர்க்காராகும். மக்களுள் ஒரு சிறுபகுதியினருக்கே வாக்குரிமையிருந்த காலத்தில்-சாம்ராஜ்ய மொன்றின் அடிமைகளாயிருந்தோரால் அதிகார பீடத்துக்கு ஏற்றபட்டோரே இன்றைய சர்க்கார்:

இந்த சர்க்கார் முற்றிலும் ஜனநாயகத்துக்கு மாறுபட்டதாகும். இது எவ்வளவு விரைவில் கலைக்கப் படுகிறதோ அவ்வளவு விரைவில் இந்தியாவுக்கும் உலகுக்கும் இன்பம் வந்துறும்.

உலக நாடுகள் பற்பலவும் இந்தியாவை ஏமாற்ற மடைந்த கண்கொண்டே பார்க்கத் தலைப்பட்டுவிட்டன. அவை சுதந்திர இந்தியாவிடம் பலப்பல எதிர்பார்த்தன; ஆனால் இன்று அதிருப்தியும் ஏமாற்றமுமடைய வேண்டிய நிலைக்கு வந்துவிட்டன."

இந்திய சர்க்காரின் இன்றைய போக்கை யறிந்துவரும் சாதாரண மனிதன ஒவ்வொருவனுக்கும் புதியதலலாத இக்கருத்தை வெளியிட்டிருப்பவர் டாக்டர் ராமமனோகா லோகியா ஆவார். பம்பாயில பத்திரிகை நிருபர் மாநாடொன்றில் பேசுகையில் டாக்டர் லோகியா இவ்வண்ணம் தெரிவித்தார். ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலெல்லாம் சுமார் பத்து வார காலம் சுற்றுப் பயணஞ்செய்து திரும்பிய லோகியாவை பத்திரிகை நிருபர்கள் அணுகுவது இயற்கையே. நிருபர்களிடம இந்திய சர்க்காரைப்பற்றி வெளிநாடுகளில இருந்துவரும் கருத்துக்களைத் திரட்டித் தந்த தொகுப்பாகவே இதனை நாம கொள்ளவேண்டும.

மொத்த மக்கள் தொகையில 100 க்கு 5 பேர் வாக்குரிமையுடையோராயிருந்த நிலையில, அந்த ஐவரைக் கொண்டே யதேச்சசாதிகார முறையில பீடமேறிய வொரு சர்க்கார்பிரதிநிதித்துவமுள்ள சர்க்காராகுமா வென்றுதூக்க நிலையிலுள்ள சாதாரண அறிவு படைத்தார் கூடக் கேட்பரே! கைப் பிடியளவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் நாட்டு மக்கள சர்க்காராவது எந்த 'ஆண்டவனுக்கு அடுக்கும்' என்றுதான யாரும் கேட்பர். அந்நிய ஏகாதிபத்திய மொன்றுக்கு ஆட்பட்டு, அடிமையாகி மௌடிகத்தில ஆழ்ந்திருந்த மக்கள சமுதாய மொன்றின மிகச் சிறுதசாம்ச பகுதியினர் தெரிந்தெடுத்த சர்க்காரொன்றை அரசியல் நீதி ஏற்றுக்கொள்ளுமா பிரதிநிதித்வ சர்க்காரென்று? இதைத்தானதெளிவின குறிப்பிட்டுள்ளார் டாக்டர் லோகியா.

இத்தகைய பிரிதிநிதித்துவமற்ற சர்க்காரொன்றுக்கு மக்கள் நலத்தில நாட்டமோ முன்னேற்றத்தில நலலெண்ணமோ, வளர்ச்சியில் அக்கரையோ, உயர்வில் சிரத்தையோ இருக்கக்கூடுமென்று நப்புவதும் இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதேயாகும். இருக்க முடியாத பண்பை இருக்கக் கூடுமென்று கருதிக்கொண்டு பிறகு 'இது சொன்னை அது செய்ததை' என்று கூறுவதற்கும், கடவுளைக் கற்பித்துக் கொண்டு பிறகு 'உலகில் இவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றனவே, கடவுளுக்குக் கருணையில்லையா' என்று (மதவாதிஒருவர்)கூறுவற்கும் எத்தகைய வேறுபாடும் இருப்பதாகநமக்குத்தோன்றவில்லை. இன்று ஆட்சி பீடமேறி நிற்கும தேசிய வாதிகளின் தன்மையைத் தொடக்க முதலே அறிந்தவர்கள நாம். 'காக்கையமர, பனம்பழம் விழ' என்ற வகையில் எப்படியோ ராஜ்யம அவர்கள் கையில் சிக்கிக்கொண்டது. பொறுப்பற்ற பிரசங்கிகள் கையில சிக்கிய பொறுப்புள்ள அரசியலாதிகாரம என்ன கதி அடையுமோ? எனவே, நம் சுயராஜ்ய சர்க்காரின் பிற்போக்குத்தன்மைகளால் இந்நாட்டு மக்களேயன்றி, வெளி நாட்டாரும அதிருப்தி - ஏமாற்றமுற்றதில ஆச்சரிய மென்ன வென்றுகே கிறோம்.

பிரதி நிதித்வமற்ற சர்க்கார் ஜனநாயக சர்க்காராக இருத்தல் முடியாது. ஜன நாயகத்துக்கு மாறான சர்க்காரொன்றுக்கு அரசியல் விழிப்பும் நாகரிகமும் வந்துற்ற இந்நாளில் இடமில்லை. எனவே டாக்டர் லோகியா,'எவ்வளவு விரைவில் இது கலைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கும் நலலது' என்று குறிப்பிட்டது பொருத்தமும நியாயமுமானதேயாகுமென்பதை யாரே மறுக்க முடியுமோ?

இந்திய சர்க்காரின் குறைபாடுகளைப்பற்றி மேலும கூறிக்கொண்டேவந்த டாக்டர் லோகியா 'உணவு' உற்பத்திப் பெருக்கம்பற்றிக் குறிப்பிட்டதாவது. விவசாயிகளுக்குப பயிற்சி தர இந்திய சர்க்

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

அமைதியை நாடுவோர்க்கு அனுமதியில்லை!

சொல்லொன்று செயலொன்றாக நடக்கும் சுதந்திர சர்க்கார்!

அ. இ. சமாதான காங்கிரசுக்கு வர அயல்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது

நாங்கள் கம்யூனிஸ்டுகளைத்தான் கண்டிக்கிறோம், அவர்களுடைய பலாத்காரச் செயல்களையே நாங்கள்வெறுக்கிறோம், ஆனால் கம்யூனிசத்தை வரவேற்கிறோம். கம்யூனிசத்திடம் எங்களுக்கு வெறுப்பில்லை என்றெல்லாம் இந்தியமுதலமைச்சர் மூன்று தியாகத்திற்கு கூலிகேட்கும் தேசியத் தோழர்கள் வரை அடுக்கடுக்கடிபேசுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

'ஆனால் நடைமுறையில் நமது காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் அரசியலாரும் கம்யூனிசத்தை அடியோடு வெறுக்கின்றனர் என்பது அவர்களுடையசொல்லாலும் செயலாலும் இனிது விளங்கும். இதற்கோர் உதாரணம் வேண்டுமெனில், உண்மையில் கல்கத்தாவில் நடைபெறவிருக்கும் அகில இந்திய சமாதான காங்கிரசுக்கு எந்த அளவுக்கு இவர்கள் ஆதரவு தருகின்றனர் என்பதைக் கவனித்தாலே போதும். அடிக்கடி அமைதி, சமாதானம் என்றெல்லாம் பேசும்இவர்கள், அ. இ. சமாதான மாநாட்டுக்கு வர சோவியத் பிரதிநிதிகள் மூவர்க்கும், வியட்நாம் பிரதிநிதிகள் நாலவர்க்கும், அனுமதிதரமறுத்துள்ளனர். சோவியத் பிரதிநிதிகளும், வியட்னாம் பிரதிநிதிகளும் இவ்விஷயத்தை அ. இ. தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர் தோழர்சக்கரைச்செட்டியார் அவர்களுக்குத் தெரிவித்துள்ளனர். இவ்விதம் ஒரு சுதந்திர சர்க்கார் மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதுகண்டு தோழர் சக்கரை சஞ்சலப்படுகிறார்.

சுதந்திர ஆட்சியின் இலட்சணத்தை மேலும் கவனியுங்கள், அயல நாட்டு பிரதிநிதிகளுக்கு அனுமதியளிக்காதது ஒரு புறமிருக்கட்டும், மாநாட்டுக்குப் பக்கத்தில் போவதற்குக்கூட அனுமதியளிக்கவில்லையாம் வங்க சர்க்கார்.

என்னே விந்தை! நடக்க இருப்பது சமாதான மாநாடு அதற்கு இவ்வளவு தொல்லை! சண்டையைத்தான் வெறுக்கும் சுதந்திர சர்க்கார் என்பார்கள். ஆனால் நமது சுதந்திரசர்க்காரோ வெளிப்படையாக சமாதானத்தைப் வெறுக்கின்றனர். இப்படிப்பட்ட ஆட்சியில் அமைதி எங்ஙனம் நிலைக்கப்போகிறதோ நாமறியோம்.

ஐ. மா. ஜமீன்தாரி ஒழிப்பு நிதி

லக்ஷ்மணபுரி, நவ. 22—ஐ. மா. ஜமீன்தாரி ஒழிப்பு நிதி சுமார் 3 கோடி ரூபாய் வரை வளர்ந்துள்ளதாம். இதுவரையும் 280 லட்சம் ரூ. சேர்ந்திருப்பதாகவும், விரைவில் 3 கோடியாகிவிடுமென்றும் சொல்லப்படுகிறது.

பல்கலைக் கழகப் பட்டமளிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா டிசம்பர் 2-ந் தேதியன்று சென்னை கவர்னர் தலைமையில் நடைபெறுமென்று தெரிகிறது. விழாச் சொற்பொழிவை சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா ஆற்றுவார்.

தேசீய சீனத் தலைநகரில் சோகமும் ஸ்தம்பிப்பும்!

தலைவரும் மந்திரிகளும் ஓட்டம் பிடித்தனர்

தேசிய சீனப்பகுதியின் தலைநகராகிய சங்கிங்கில் சோகமான சூழ்நிலை பரவியுள்ளது. தலைநகரை விட்டுத் துணைத் தலைவரே ஓடியது பேரிடியாகக் கருதப்படுகிறது. சர்க்கார் காரியங்களைக் கவனித்துவந்த பிரதமர் யென்ஹ்ஸிஷானும் இன்னுஞ் சில மந்திரிகளும்கூட ஓடத் தலைப்பட்டுவிட்டனர். சியாங்-கேய்-ஷேக் மட்டும் எங்கோ கிராமப்பகுதியில் உட்கார்ந்துகொண்டு வேலை செய்துவருகிறாராம்.

போக்குவரத்து வசதிகளும் ஆட்டங்கொடுத்து,தாறுமாறுகப் போய்விட்டபடியால், நகரை விட்டு வெளியேறுவதற்கும் வகையில்லாமலிருந்து வருகிறதாம். தலைவர் லீயை மீண்டும் அழைக்கலாமென்றாலோ, அவர் மருத்துவம் பார்த்துக்கொள்ள அமெரிக்காவுக்குப் புறப்பட ஆயத்தமாகிறாராம்.

இன்னும் ஐம்பதாண்டில் காலரா இல்லையென்றாகும்

—(0)—

உலக சுகாதார அமைப்பு உறுப்பினர் கருத்து

இந்தியாவில் காலரா நோய் இல்லையென்றாக்க இன்னும் ஐம்பது ஆண்டுகள் பிடிக்கும் என்று, உலக சுகாதார ஸ்தாபன உறுப்பினர் டாக்டர் ஏ. மார்சல்வர்செல் 23-ந் தேதியன்று பம்பாயில் குறிப்பிட்டார். இவர் அன்றைய தினமே ஜினிவாவுக்குப் புறப்பட்டார்.

இந்நாட்டில் இப்போது நடைபெற்று வரும் காலராத் தடுப்பு வேலை மிக மிக திருப்திகரமாகவே இருக்கிறதென்றும், ஆயினும் சுகாதார நிலை பக்குவமாகும் வரையில் உடனடியான விளைவை எதிர்பார்க்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 25—11—49 வெள்ளிக்கிழமை

திட்டம் தீட்டுக!

“இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பறந்து கெடுக உலகியற்றியான்” என்பது, வள்ளுவர் ‘உலக முதல்வனுக்கு இட்ட சாபம்’! இன்று, வளமுள்ள இந்த நாட்டில், வறியவர்கள் நடமாடுகிறார்கள் என்பதைக் காணும்போதும், பிச்சை எடுத்து வயிறுண்ண வேண்டிய நிலைமையில் பல இலட்சக்கணக்கான மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியும் போதும், ‘இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், வீழ்ந்து கெடுக நாடாள்வோர்” என்று ‘சாபமிட்டத் தோன்றத்தானே செய்யும்!

இரந்து உயிர்வாழும் கூட்டம் நாளுக்கு நாள் இந்த நாட்டில் பெருகி வருகிறது. அக்கூட்டம் சமுதாயத்துக்கே ஒரு களங்கமாக இருந்து வருகிறது. நாகரிக வளர்ச்சியில் மேம்பட்டிருப்பதாகக் கருதும் ஒரு நாடு, இரப்போர் கூட்டத்தை வைத்துக்கொண்டு பெருமை பேச முடியாது. பிச்சைக்காரர்கள் நாடெங்கும் திரிவதை, நாகரிக முதிர்ச்சியின் சின்னமாக அறிவுடை உலகம் எதுவும் ஏற்றுக்கொள்ளாது. சமுதாயத்தைக் கறைபடுத்தும் அத்தகைய களங்கம், உடலில் படரும் மேக நீர்ப்படைபோல், இந்நாட்டில் பரவி வருகிறது. அத்தகைய இழிவு பயக்கும் கறையை நீக்காத வரையில், நம் நாடு நாகரிகத்துறையில் முன்னேறுவதற்கான அறிகுறியைப் பெற்றுள்ளதாகக் கூறமுடியாது.

‘இரப்பவன் ஒருவன் இருக்கிறான்’ என்ற நிலை ஏற்படாமல், சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு முழுவதும், ஒரு நாட்டின் அரசாங்கத்தையே சார்ந்ததாகும். ஒரு அரசாங்கத்தால் அந்தக் கடப்பாட்டைச் செய்து தீர முடியவில்லையானால், ஒன்று இரப்போர் கூட்டத்தை ஒழிக்க அது கவலை கொள்ளாமலிருக்க வேண்டும், அல்லது ஒழிக்கும் திறமையற்றதாக இருக்க வேண்டும்!

சென்னை சட்டசபையில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைப் பற்றி மந்திரி—உறுப்பினர்களிடையே கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன.

பிச்சை எடுப்பதைத்தடுக்க மசோதா கொண்டுவரப்படுமா, என்று தோழர் இஸ்மாயில் கேள்வி கேட்டுள்ளார். பிச்சை எடுப்பதைக் குற்றமாக்கி ஏற்கனவே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்று சட்ட மந்திரி பதிலிறுத்துள்ளார்.

பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குப் போதுமான அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படாதது உண்மையா என்று தோழர் ஹுசேன் கேட்டுள்ளார். நம் மக்களிடையே பிச்சைகொடுக்கும் பழக்கம் இயற்கையாகவே அமைந்திருப்பதால், பிச்சை ஒழிப்பு விஷயத்தை முழு அளவுக்கு அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை என்று மந்திரி விடை பகர்ந்துள்ளார்.

ஏற்கனவே உள்ள சட்டம் சரியாக வேலை செய்யாததால் வேறு விரிவான சட்டம் கொண்டு வரப்படுமா என்று தோழர் ஹமீத்கான் கேட்க அதற்கு மந்திரியார் சட்டம் இயற்றிவிட்டால் குற்றம் நின்றுவிடுமென்று நினைக்க முடியாது, என்று மாற்றம் கூறியுள்ளார்.

இவைகளைக் கவனிக்கும்போது, பிச்சைக்காரர்கள் கூட்டம் என்றஒன்று நாளுக்கு நாள் பெருகி வருவதிலே இன்றைய அரசாங்கத்துக்கு, வெட்கம் ஏற்படவில்லை! அவர்கள் நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற கவலையும் இல்லை! அந்த அவமானச் சின்னத்தைப் போக்க வழிவகை காணவேண்டும் என் இதிலே அக்கரை பிறக்கவும் வில்லை! என்பது தெளிவாகத் தெரியக் கிடக்கின்றது. “வீழ்ந்து கெடுகநாடாள்வோர்” என்ற ‘சாபத்தை’ அவமானம் பொறுக்கமாட்டாத அறிவுடையோர் இடத் தொங்கினால்க அதில் வியப்பென்ன இருக்க முடியும்!

நொண்டி, முடம், குருடு, தொழு நோய் கொண்டோர் போன்ற வறியவர்கள் பிச்சை எடுத்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்று ஏற்படும்போது இரந்துண்ணும் நிலைக்கு இழிந்துவந்து, பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொள்ளுகிறார்கள் அத்தகையோர் பிச்சை எடுக்கும்போது, பொதுமக்களின் இன்ப உள்ளம், இரக்கச் சிந்தையால் கலைக்கப்பட்டு, ஒரு விதத் துன்ப உணர்வு உள்ளத்திலே ஊசலாடி நிற்க, ஏதேனும் கொடுத்து அக்கொடிய காட்சியினின்றும் விலகிவிட பொது மக்கள் எண்ணுகின்றனர். இம்மாதிரி அமைதி உள்ளம் கெடும் வகையில் ஏற்படும் காட்சிகளைப்பொதுவிடங்களில் நடைபெறாமல் தடுத்து, அத்தகைய வறியவர்களைத் தனியே வைத்துக் காப்பாற்றும் பொறுப்பை நேர்மையான அரசாங்கந்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்! ஏற்றுக் கொள்ளவேண்டியது மக்கள் நலன் காக்கக் கடமைப்பட்டிருக்கும் அரசாங்கத்தின் இன்றியமையாக் கடமையாகும். அவர்களுக்கு வயிற்றுணவு போட்டு, அவர்களிடமிருந்து எந்த அளவுக்கு எம்மாதிரியான வேலையைத் திருப்ப வாங்கிக்கொள்ள முடியுமோ அதனையும் வாங்கிக் கொள்ளலாம். அதற்கென ஒரு தொழிற்சாலையைவைத்து குருடு, முடம், நொண்டி போன்றோரிடத்திருந்து அவர்களால் முடிந்த அளவு வேலையை வாங்கிக்கொள்ளலாம். அதனால், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாத நிலை உண்டானாலும் உண்டாகலாம். ஏன் இந்த முறையைக் கைபாள அரசாங்கம் முன் வரக்கூடாது? ஏன் இதில் அக்கரை கொள்ள மறுக்கிறது?

யாதொரு தொழிலும் செய்து பிழைக்க வசதியும், ஆற்றலும் அற்று உடலூனமுள்ளவர்கள்வேறுவழியின்றி, பிச்சை எடுக்கும் தொழிலில் இறங்குகிறார்கள். அத்தகையோரைத் தனியாக வைத்துக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின்கடமை என்றோம். பிச்சை எடுக்கும் தொழில், வேறு தொழில்களைவிட அதிக லாபமுள்ளதாக இருக்கிறது என்று கருதி, நல்ல உடற்கட்டுடைய தடியாட்களும் அந்தத் தொழிலில் இறங்கி இருக்கிறார்கள் ஏராளமான எண்ணிக்கையில். அத்தகைய ‘தடிராமன்’களின் தொல்லைகள் சென்னை போன்ற நகரங்களில், உள்ளத்தை வருத்தும் கொடும் நோய்களாக இருந்து வருகின்றன. பலர் பாசாங்குக்காரர்களாய் கஷ்டப்படுவது போல் நடித்துப், பொது மக்களின் இரக்கச் சிந்தையைத் தூண்டிவிட்டு, பணம் பறித்துக் கொண்டு, பொது மக்களை ஏமாற்றி வாழும் வஞ்சகச் சோம்பேறிக் கூட்டமாக இருந்து வருகிறார்கள். அத்தகையோர் சமுதாயத்திற்குப் பெரும் மாசாக இருப்பதை ஏன் இன்றைய அரசாங்கம் உணர மறுக்கிறது? அத்தகையோர் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களிடத்தில் ஏன் வேலை வாங்கிக்கொண்டு சோறுபோட திட்டம் வகுக்கக்கூடாது இப்படி வஞ்சகர்களாய்— சோம்பேறிகளாய் திரிபவர்களைத் தடுக்க, அரசாங்கம் முனைய வேண்டும். அரசாங்கம் தனி தொழிற்சாலைகளை ஆரம்பித்தால், அதில் அவர்களைக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளவும், அவர்களிடத்தில் வேலைவாங்கிக் கொள்ளவும், அதன் மூலம் அவர்களுக்கு உணவு இட்டுக் காப்பாற்றவும் அரசாங்கத்தால் இயலுவதொன்றாகும். அதை ஏன் செய்யக்கூடாது, கவலையிருக்குமானால்?

வகையற்றவர்களைக் காப்பாற்றவும், தடியர்களை அடக்கவும், சோம்பேறிகளை ஒழிக்கவும் சமுதாயத்தில் புரையோடியிருக்கும் புண்ணை ஆற்றவும், நாட்டிற்கு ஏற்படும் அவமானத்தைப் போக்கவும் ஆளவந்தார்கள் சட்டம் இயற்ற வேண்டும்—கடுமையாக இயற்றவேண்டும் திட்டத்தோடு இயற்ற வேண்டும்—திறமையாக இயற்றவேண்டும்! மனமுண்டானால் மார்க்கம் உண்டு! எனவே சமுதாயச் சீரழிவுச்சின்னத்தை-இரக்கும் தொழிலை-ஒழிக்க, தீவிரமாக, நல் முறையில், வெற்றிகரமாக நடமாடும் முறையில், திட்டம் தீட்டுக! என ஆட்சிப் பீடத்தார்க்கு எடுத்துரைக்கிறோம்!

திராவிட முன்னேற்றக்கழக உதவி நிதிக்கு

தூத்துக்குடி-விருதுநகரில் நாடகங்கள்

தூத்துக்குடி, நவ. 21—

திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகத்தின் நிதிக்காக, தூத்துக்குடியில் நாடகங்கள் நடத்துவதென்ற முடிவுக்கேற்ப தி. மு. தலைமைக் கழகத்தின் சார்பாக, அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மதுரை மாவட்ட அமைப்பாளர் தோழர் எஸ் முத்து அவர்களுடன் 21-11-49 பகல் 2-மணிக்கு இங்கு வந்து சேர்ந்தார். புகைவண்டி நிலயத்திற்கு நகர திராவிடமுன்னேற்றக் கழகத் தோழர்கள் வந்திருந்து மகிழ்ச்சியுடன்வரவேற்றனர்.

நகர தி. மு. க. செயலாளர் தோழர் ராமலிங்கம் அவர்களைக்கொண்டு, நாடக சம்பந்தமாக ஆலோசிக்க, நகர திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கொண்ட கூட்டத்தைக் கூட்டுமாறு தோழர் என். வி. என். கேட்டுக் கொண்டார்.

மாலை 4-மணி முதல் இரவு 9-மணி வரை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நெல்லை மாவட்ட அமைப்பாளர் தோழர் கே. வி. கே. சாமி, நிதி உறுப்பினர்கள், தோழர்கள் ஏ. வி. ஏ. வள்ளிமுத்து, எஸ். நீதி மாணிக்கம், தலைமை நிர்வாகப் பொதுக்குழு உறுப்பினர்களான, எம். எஸ். சிவசாமி, தங்கப்பழம் ஆகியோரும்வந்திருந்தனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள், ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

தூத்துக்குடி நகர திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள் ராமலிங்கம், ரத்தினம், கே. வெற்றிவேல், என். நடராசன் ஆகிய நால்வரையும் கொண்ட துணைக் கமிட்டியிடம் நாடக ஏற்பாடுகள் முழுவதையும் ஒப்படைப்பது.

தோழர்கள் ராமலிங்கம் (செயலாளர்); ரத்தினம் (உதவிச் செயலாளர்), கே. வெற்றிவேல் (பொருளாளர்,) என். நடராசன் (விளம்பரச் செயலாளர்) ஆகியோர் பொறுப்புகளை ஏற்று நடத்துவது.

நெல்லை மாவட்ட அமைப்பாளர் தோழர் கே. வி. கே. சாமி, நிதி உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. ஏ. வள்ளிமுத்து, எஸ். நீதி மாணிக்கம் ஆகியவர்களும் துணைக் கமிட்டியினருடன் சேர்ந்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்வது.

நாடக சம்பந்தமான டிக்கட்டுகள் முழுவதற்கும் பொருளாளர் தோழர் கே. வெற்றிவேல் அவர்களே பொறுப்பாளராக இருப்பதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

டிசம்பர் 24, 25-ந் தேதிகளில் தூத்துக்குடியில் நாடகங்களை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர், இம்முடிவுகளை தூத்துக்குடி நகர தி. மு. க. தோழர்கள் கொண்ட கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறி, அனைவரும் துணைக் கமிட்டியாருடன் ஒத்துழைத்து வெற்றிகரமாக நடத்திக் கொடுக்குமாறும், துணைக்கமிட்டியை நிறுவும் பணியில் ஒத்துழைத்த நகர தி. மு. கழகத் தோழர்களுக்கும், மதுரை தோழர் எஸ் முத்து அவர்களுக்கும், தி. மு. க. தலைமைக் கழகத்தின் சார்பில் நன்றி கூறினார். இரவு 9 மணிக்கு இந்நிகழ்ச்சி முடிவுற்றது.

உணவுக்குப்பின் இரவு 12-மணிவரை இயக்க சம்பந்தமாக தோழர்களுடன் பேசியிருந்து விட்டு, தோழர் என். வி. என். விருதுநகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

விருதுநகரிலும் நாடகம்

விருதுநகர், நவ. 22—

22-11-49 காலை விருதையில், நகர தி. மு. க. தோழர்களுடனும், மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எஸ். உத்தண்டன் அவர்களுடனும், தோழர் என். வி. என் திராவிட முன்னேற்றக் கழக சம்பந்தமாக கலந்து பேசினார். முடிவாக, இயக்க நிதிக்கு விருதுநகரிலும், அதாவது தூத்துக்குடி நாடகங்களுக்கு அடுத்த நாள் “சந்திர மோகன்” நாடகத்தை நடத்த, நகர தி. மு. க. நிர்வாகக் கமிட்டி மூலம் ஆவன செய்வதாகவும், அதற்கு மத்திய கழகம் ஒப்புதல் தரவேண்டு மென்றும், தோழர் எஸ். உத்தண்டன் கேட்டுக்கொண்டார்.

சென்னை, நவம்பர் 24—

தோழர். என். வி. நடராசன் விருதுநகரிலிருந்து புறப்பட்டு 23-11-49-ந் தேதி காஞ்சி வந்து, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுடன் மேற்கண்ட விஷயமாகக் கலந்து பேசிவிட்டு, 24-11-49 காலை சென்னை வந்து சேர்ந்தார்.

பிரான்சும் கண்டுபிடித்துவிட்டது!

தன்னிடம் மட்டுமே அணுக்குண்டு இருக்கிறது என்று அகம்பாவம் கொண்டு இரிந்த அமெரிக்காவின் அகம்பாவம் சரியும் காலம் நெருங்கிவிட்டது. ரஷியாவும் அணுக்குண்டு கண்டு பிடித்துவிட்டது என்ற செய்தி அமெரிக்காவைத் திகைக்கச் செய்தது. இப்பொழுது அணுக்குண்டு இரகசியம் மேலும் மேலும் வெளிப்பட ஆரம்பித்திருக்கிறது. அணுக்குண்டு தயாரிப்புக்கு இன்றியமையாது வேண்டப்படும் ப்ளூடோனியம் என்னும் பொருள் உற்பத்தி செய்வது எங்ஙனம் என்பதை பிரான்ஸ் கண்டுபிடித்துவிட்டது. ஆனால் இது சம்பந்தமான விவரங்கள் யாவற்றையும் பரம ரகசியமாக வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[illegible]

அறியாமை அகல்வதும் அவசியமே

க்ஷய நோய் தவிர்க்க சுகாதார மந்திரியார் காட்டும் வழி

அனைத்துக்கும் அடிப்படைத் தேவை பொருளாதார சமத்துவமே

"க்ஷய ரோகத்தால் இந்தியாவில் ஒவ்வொரு வருஷமும் 5 லட்சம் பேர் மடிகின்றனர். 25 லட்சம் பேர் க்ஷய ரோகத்தால் அவஸ்தைப் படுகின்றனர்."

"க்ஷயரோகத்தை எதிர்த்துப் போராடுவது, கொடிய நோயுடன் மட்டும் நடத்த வேண்டிய போராட்டமல்ல. வேறான கொள்கைகளையும் பாமர மக்களின் அறிவின்மையும் எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டமாகும். அதிகரித்து வரும் இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு இதற்கு முன் செய்யப்பட்ட முயற்சிகள் போதவில்லை."

என்று பம்பாய் க்ஷயரோக நிவாரண ஊழியர்கள் மாநாட்டில், இந்திய சுகாதார மந்திரி தோழியர் ராஜகுமாரி அமிர்த கௌரி பேசியிருக்கிறார்.

ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் மக்களைக் கொன்று குவிக்கும் கொடிய ரோகத்தை ஒழிப்பது எவ்வளவு அவசியம் என்பது பற்றி ஆராய்வதற்கு முன், அந்நோய்க்கு உள்ள அடிப்படைக் காரணங்களையும் நாம் கண்டறிதல் வேண்டும். இந்நோயைப் போக்க 400 கோடி ரூபாய் தேவை என்கிறார் சுகாதார அமைச்சர். இன்றைய நிலையில் 400 கோடி ரூபாயைச் செலவிட்டு க்ஷய நோயைத் தடுப்பது மிக மிகக் கடினம். அரசியலாரோ எடுத்ததற்கெல்லாம் பணமில்லை என்று பஞ்சப்பாட்டை பாடிய வண்ணமிருக்கின்றனர். எனவே, அந்த நோயைப் போக்கவும் நோய் வராமல் தடுக்கவும் நாம் செலவிடும் பொருளையும் நேரத்தையும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயரச் செய்வதற்குச் செலவிட்டோமானால் அதனால் ஓரளவு நற்பயன் விளையக்கூடும்.

இந்தியாவில் க்ஷய நோய்க்கு மக்கள் எளிதில் இரையாவதற்கு முக்கியமான காரணம், வறுமைக்கும் க்ஷய நோய்க்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனைச் சுருக்கச் சொல்லவேண்டுமானால், வறுமைப் பிணி என்பது க்ஷயரோகம் என்றே சொல்லலாம். அப்படியாயின் செல்வர்களுக்கு இந்நோய் ஏற்படுவதில்லையா எனில், உண்டு; ஆனால் ஏழைகளை அந்நோய் பற்றும் அளவைக் காட்டிலும் செல்வரைப் பற்றும் முறைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. செல்வர் உல்லாச வாழ்வில் ஈடுபட்டு சுகாதாரத்தையும் மறந்து உடல் நலத்துக்கு ஊறு பயக்கும் வண்ணம் ஒழுக்கம் கெட நடந்து கொள்ளுவதினாலேயே பெரும்பாலும் இந்நோய் அவர்களைப் பற்றுகிறது. ஏழைகளுக்கு அப்படியல்ல, வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளே கிடைக்கப் பெறாமல், அவர்கள் உண்டியும், [illegible] உறைவிடமும் கிடைக்கப் பெறாத காரணத்தால், க்ஷய நோய்க்கிருமிகள் எளிதில் அவர்களைப் பற்றி, அவர் தம் உயிரைக் குடிக்க வழி ஆரம்பித்துவிடுகிறது. எனவே, அவர்கள் எளிதில் அந்நோய்க்குப் பலியாகி விடுகின்றனர்.

ஆகவே, க்ஷயநோய் ஒழியவேண்டுமானால், வறுமை ஒழிய வேண்டும். வறுமை ஒழிய வேண்டுமானால், நாட்டுப் பொருளாதார நிலையும், அதற்கு அடிப்படையாக உள்ள அறிவியலும் செம்மைபெற வேண்டும். இதைத்தான் தோழியர் அமிர்தகௌரி "தவறான கொள்கைகளையும் பாமர மக்களின் அறிவின்மையையும் எதிர்த்துப் போராட வேண்டும்" என்று வற்புறுத்தியுள்ளார். இதைக்கொண்டு பகுத்தறிவுப் பிரசாரம் எத்தனை இன்றியமையாதது என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறோம். இன்னமும் நோய்களின் காரணமறியாமல் காளியையும் மாரியையும் நம்பி, காசைக் கரியாக்கிக் கொண்டும், வாழ்வை விழலாக்கிக் கொண்டுமிருக்கும் ஏழைகள் எண்ணற்றவர் இருந்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம் அல்லவா?

எனவே, க்ஷயரோக ஒழிப்பு என்பது, அறியாமையையும் வறுமையையும் ஒழிக்கும் பணியேயாகும். இந்த அறியாமை ஒழிப்பும், வறுமை ஒழிப்பும் வெவ்வேறானவை என்று சொல்வதற்கில்லை. அறியாமை ஒழிந்து, பகுத்தறிவு வளர்ந்துவிட்டால் மாத்திரம் போதாது. பகுத்தறிவு வாதிகளான பலர் இந்தப் பயங்கர நோய்க்கு ஆளாவதில்லையா? இன்னும் கேட்கப்போனால் பகுத்தறிவாளர்களையே இந்நோய் எளிதில் பற்றக்கூடும் எனலாம். ஏனெனில், பகுத்தறிவுடையோர் சிந்தனையாளராயிருப்பது இயல்பு. சிந்தனைக்கும் க்ஷயநோய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது உடல்நூல் வல்லுனர் கருத்து. அது போலவே, மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கும் செல்வர் பலர் இந்நோய்க்கு ஆளானாலும், ஆளானாலும் அதனைப் போக்கிக்கொள்ளும் வைத்திய வசதிகளைப் பெற்றிருப்பதையும் நாம் காண்கின்றோம் அல்லவா? அது மட்டுமின்றி, க்ஷய நோயைப் பொருத்த வரையில் வறுமைதான் முக்கிய காரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். க்ஷய நோய் என்று மருத்துவர்கள் நினைத்திருந்த காலம் போய் வளமான வாழ்வும், வசதியான உறைவிடமும், ஓர் அளவு மருத்துவ வசதியும் கிடைக்கப் பெற்றால் இதனைச் சுலபத்தில் போக்கலாம், அல்லது தடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இப்படிப்பட்ட நிலையில் மக்களுடைய பொருளாதார வசதி பெருக வேண்டுவதே இந்நோய் நீக்கும் அடிப்படை முறையாகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வனைத்தையும் ஆராய்ந்து பார்க்கையில்; க்ஷய நோய் தொலைய வேண்டுமானால் இந்நாட்டிற்கு, வறுமையின் உறைவிடமான இந்நாட்டிற்குப் பொதுவுடமை வாழ்வு இன்றியமையாததாகும். அத்தகைய பொதுவுடமை வாழ்வு பூக்க பாடுபட வேண்டுவது ஒவ்வொருவருடைய இன்றியமையாக் கடனாகும். அதே சமயத்தில் அறிவியல் முன்னேற்றத்துக்கும் வழிகோல வேண்டும்.

மூடக்கும் தவிர்க்கவழி!

சர்க்கார் டிரான்ஸ்போர்ட் சர்விசைச் சேர்ந்த டிரைவர்கள், கண்டக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கு இனிமேல் கதரால் தயாரிக்கப்பட்ட காக்கி யூனிபாரங்கள் வழங்கப்படுமென்று தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாய் நடந்தேறிவருகின்றனவாம்.

இந்தியாவில் சைக்கிள் தயாரிப்பு

மூன்று தொழிற்சாலைகள் நிறுவதிட்டம்

பெரும் கைத்தொழில்கள் சிலவற்றையும் சிறிய அளவில் தொழில்கள் சிலவற்றையும் நிறுவதென்ற இந்திய சர்க்காரின் முடிந்த முடிவுகளைக் கைத்தொழில்சபை இலாகா காரியதரிசி தோழர் எஸ். ஏ. வெங்கட்ராமன் வெளியிட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் முக்கியமாக யந்திர உற்பத்தித் தொழிற்சாலை யொன்று ரூ. 15 கோடி செலவில் மைசூரில் அமைக்கப்படுமென்று தெரிகிறது. ஆசியாவிலேயே இது பெரும் தொழிற்சாலையாகத் திகழுமெனக் கூறப்படுகிறது. வங்காளத்தில் சித்தரஞ்சனுக்கருகில் டெலிபோன் கேபிள் தொழிற்சாலையொன்றும் வங்காளம், சென்னை, மைசூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலைகளும் அமைக்கப்படுமென தோழர் வெங்கட்ராமன் மேலும் தெரிவித்தார். மத்திய சர்க்காரின் நேரடியான நிர்வாகத்திலுள்ள பகுதிகளில் சிறிய அளவு கைத்தொழில்கள் பெருக்கத்துக்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ஆண்டு தோறும் 10 லட்சம் ரூபாய் வீதம் செலவிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறதென அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

மௌலானா :: :: உபதேசம்!

'வடநாட்டு மக்களின் மொழிதன்மீது வலுக்கட்டாய மாகத் திணிக்கப்படுகிறதென்று தென்னிந்தியன் கருதக்கூடாது' என்று இந்தியாவின் கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் ஆஸாத் 23-ந் தேதியன்று, புதுடெல்லியில் இந்தி ஆசரவாளர் மாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

புரியாத மொழியொன்றினை வேண்டாத மக்கள் மீது விரும்பத்தகாத முறையில் நுழைக்க முயல்வதை வேறு எப்பெயரிட்டு அழைப்பது என்று கேட்கிறான் தென்னாட்டான். தாய் மொழியிலே எழுதப் படிக்கத் தெரியாத பல லட்சம் நிரம்பிக்கிடக்கும் நாட்டில் தேசியப் பித்தலாட்டத்தின் பெயரால் லம்பாடி மொழியொன்றைக் கொண்டுவந்து புகுத்தி, அதன் மூலம் மக்களை மௌடிகத்தில் ஆழ்த்தி வைக்க நினைப்பதை வேறென்னவென்றுதான் கூறுவது? இலக்கண இலக்கிய கலை நாகரிகச் சிறப்புகள் அத்தனையும் பெற்று மிளிரும பொன்மொழியொன்றினை வீழ்த்தி அதன் வழி அம்மொழி மக்களை ஆட்கொள்ள அந்நிய மொழியொன்றினை அரியணையேற்றுவதற்கு 'வலுக்கட்டாய நுழைப்பு' என்பது தவிர வேறு ஏதாகிலும் பெயருண்டா?

திருச்சி மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

—(0)—

டிசம்பரில் நடைபெறும்

திருச்சி, நவ. 22— 20—11—49 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி, "கருணாநிதி" பார்க்கில் திருச்சி மாவட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

1. கீழ்க்கண்ட தோழர்களை வரவேற்புக்கழக உறுப்பினர்களாக இக்கூட்டம் தேர்ந்தெடுத்தது. வரவேற்புக் கழக உறுப்பினர் கட்டணம் ரூ 5-0-0 (ஐந்து).

2. திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டை டிஸம்பரில் திருச்சியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

3. இம்மாவட்ட மாநாட்டைத் திருச்சியில் நடத்த அனுமதி கொடுக்கும்படி மாகாண தி. மு. க. கமிட்டியை இக்கமிட்டி கேட்டுக் கொண்டது.

தோழர்கள் எம். எஸ். மணி என். சாம்பு இவர்கள் கன்வீனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(வரவேற்பு உறுப்பினர் கட்டணம், மாநாட்டு நன்கொடைகளைக் கன்வீனர் முகவரிக்கு அனுப்பும்படி கோரப்படுகிறது.) 11-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

வரவேற்பு கழக உறுப்பினர்

திருச்சி நகரம்:—என். சங்கரன், என். சாம்பசிவம், என். எஸ். மணி, தி. உ. சிவசங்கரன், து. வானமாமலை, ஆர். நாகசுந்தரம், ஆ. அன்னமலை, ஆர். எல். பொன்னுசாமி; சுஷ்ருதீன்சாகிப், ஜானிசாகிப், கே. கோவிந்தராசன், (மகாராஜா பிரஸ்) மாணிக்கம், பி. மாசி, எஸ் எம். சேட்முஸ்தபா, கு. துரைசாமி, பி. சாலமன்கிருஷ்டி, வி. பாலு, பி. பாலசுப்பிரமணியம், ஜெகதீசன், நடராசன், எ. ஜான்.

திருவானைக்காவல்: மருதைநாயகம், வடிவேல்.

சிங்கம் :—வி. சீனிவாசன், டி. நடேசன், எம். நடராசன்.

பொன்மலை:—எ. கோவிந்தசாமி, எம். நம்பிக்கைராஜ், எ. ஆறுமுகம், ஜி. பாங்குசம்.

திருவெறும்பூர் :—நடேசன், சுவர்ணவேல்.

கந்தர்வக்கோட்டை:-எஸ் எஸ். சாமிமுத்து.

ஜெயங்கொண்டான்:—கே. எஸ். காசிம, இராசகோபால், இராசராம்

கரூர்:—கோவிந்தராஜுலு, நல்லுசாமி, வையாபுரி, இராமசாமி, டி. பி. மூர்த்தி, எ. சின்னசாமி.

புதுக்கோட்டை:—முருகு. சுப்பிரமணியம்; அ. ரு. பெரியண்ணன், சிதம்பர நடராசன், முத்தையா.

லால்குடி:—எஸ். எஸ். சீனிவாசன், நடராசன், பி. எம் நாராயணசாமி, எ. பி தர்மலிங்கம், சோமசுந்தரம், எம். பி. ஆறுமுகம்.

முசிறி:—என். எஸ். சுந்தரம், மணி, எ சீனிவாசன், அருணாசலம், எம். எஸ். இராசன், கோவிந்தராஜுலு, அழகமுத்து, சுப்பிரமணியம்.

குளித்தலை:—கே. இராசா, சின்னப்பன், சமுத்திரபாண்டியன்.

பெரம்பலூர்:— செல்லராஜ், விஜயகோபாலன்.

வரவேற்புக் கழக உறுப்பினர்கள் மொத்தம் 65 பேர்.

பெரியார் கூட்டத்தில் திருமணக் கேள்விகள்

திருவத்திபுரம், நவ. 21— 19—11—49 சனிக்கிழமை யன்று இங்கு நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்கள் பேசினார்கள்.

கடைசியில் கேள்விகளுக்குப் பதில் சொல்லவந்த பெரியார் அவர்கள், "கேள்வி கேட்கும் முறையின் இலக்கணம்" பற்றிச் சிறிது நேரம் பேசிவிட்டு, கேள்விகளுக்குப் பதில் சொன்னார்.

கேள்விகள் கேட்டது யார் என்பதை அறியாமலே, முன்னேற்றக் கழகத்தினர் என்ற தவறான கருத்துடன், மிக மிக மோசமான முறையில், ஆத்திரத்துடன் பதிலிறுத்தது மன்னியில், கேள்வி கேட்டவர் கூலிபெற்றுக்கொண்டவர் என்றும் சொன்னார்.

கடைசியாக, கூட்டத்திற்கு நன்றி கூறவந்த தோழர் மாலண்ணா தேவராசன் நிலைமையைத் தெளிவுபடுத்துவதாகக் கூறி,

"கூட்டத்திலே கேட்கப்பட்ட கேள்விகள் காங்கிரஸ் தோழர்களாலோ, முன்னேற்றக் கழகத் தோழர்களாலோ கேட்கப்பட்டவை அல்ல. அவை யாவும் எங்களாலேயே கேட்கப்பட்டவை"

என்று சொல்ல பெரியார் அவர்கள் "இது மகா கேவலம். இதுமாதிரியென்று தெரிந்திருந்தால் நான் இப்படி பேசியிருக்கமாட்டேன்!" என்று வருத்தத்துடன் கூறிக்கொண்டே மேடையை விட்டு இறங்கிவிட்டார்.

நகர் எங்கும் இதைப்பற்றியே பேச்சாக இருக்கிறது என தி. மு. க. விளம்பர உறுப்பினர் தோழர் மா. ந. இராசமாணிக்கம் எழுதுகிறார்.

பெரியார் சென்ற பல இடங்களில் கேள்விகள் கேட்கப்பட்டதாகவும், பதில் சொன்னதாகவும் நாம் அடிக்கடி பத்திரிகையில் பார்க்கிறோம் திருவத்திபுரம் நிகழ்ச்சியைக் கவனிக்கும்போது கேள்விகள் "பெரியாரின்" கோபத்தைத் தான் "திராவிடர் கழகத்தாராலேயே" தான் பெரும்பாலான இடங்களில் கேட்கப்படுகிறதெனவும், முன்னேற்றக் கழகத் தோழர்கள் அதற்குப் பொறுப்பாளிகள் அல்லர் என்பதும் யூகிக்க இடமேற்படுகிறது. (ஆ-ர்)

அதற்கொரு - - 50 லட்சம்!

இந்தியாவில் கிராமத்துக்கொன்றுவீதம் சுமார் ஆயிரம் காந்தி இல்லங்களைக் கட்ட, காந்தி தேசிய நினைவு நிதி ட்ரஸ்ட் திட்டமிட்டுள்ளதாம். இது பற்றி முதலில் யோசனை கூறியவர் பண்டித நேருதானாம். ட்ரஸ்டும் நேரு யோசனையை ஏற்றுக்கொண்டு, வழிமுறைகளை ஆலோசித்து வருகிறதாம். இப்படி அமைக்கப்பெறும் ஒவ்வொரு இல்லத்திலும் அடிப்படைக் கல்வி நிலையமொன்றும், கிராமப் பஞ்சாயத்து சபையொன்றும் அமைக்கப்படுமாம். இந்த ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு ரூ 50 லட்சம் செலவாகுமெனக் கணக்கிடப்படுகிறது.

அன்று காந்தி பஜனை, இன்று பண்டிதர் பஜனை!

ஆற்றில் கரைந்தது அஹிம்சைக் கொள்கை!

ஆவன செய்ய அங்கே இடமில்லை, ஆக்கபணிபுரிய இங்கே வாருங்கள்!

——(0)——

திருவானைக்காவலில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

திருவானைக்காவல், நவ. 21—

19—11—49 சனி, மாலை 6 மணிக்கு திருவானைக்காவல் திராவிடமுன்னேற்றக் கழகக்கிளையின் துவக்க விழா ஆரம்பமானது. தோழர் இரத்தினவேலு அவர்கள் திராவிட நாட்டுப்பண்பாடினார். தோழர் வடிவேலு முன்மொழியவும் தோழர் கண்ணையன் ஆமோதிக்க, தோழர் வி. சீனிவாசன் தலைமைதாங்கி தி.மு.க. இது போன்ற கூட்டங்கள் நடத்தவது கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைவதைப் பாராட்டிப் பேசவும் திராவிடநாடு திராவிடருக்கே என்ற பேரொலியுடன் தோழர் இரா. துரைராசன் பேச அழைக்கப்பட்டார்கள். பின்னர் ஈ. வி. கே சம்பத் இரண்டு மணி நேரம் விரிவாக பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் இரு தீர்மானகள் நிறைவேற்றப்பட்டது.

1. சீரங்கம் உயர்நிலைப் பள்ளி "ஹாஸ்டலில்" பார்ப்பன மாணவர்களும், தமிழர் மாணவர்களும் சாப்பிடும் போது. தட்டி அடைத்து ஒருவருக்கொருவர் மறைமுகமாக உணவு உண்ணும்படி செய்கிறார்கள். பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்ற காரணம் காட்டுகிறார்கள். இதை இக்கூட்டம் கண்டிக்கிறது அதற்கு அரசியலார் ஆவன செய்வார்களா?

2. சீரங்கத்தில் இலவச வாசகசாலையும் ரேடியோவும் இருப்பதுபோல் திருவானைக்காவலிலும் ஒரு இலவச வாசகசாலையும், ரேடியோவும் ஏற்படுத்தும்படி சீரங்கம் நகரசபையைக் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுமக்களின் கைதட்டல் மூலம் இவ்விருதீர்மானங்களும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது. பின் தோழர் மருதநாயகம் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஈ. வெ. கி சம்பத்

ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது:—

"தி. மு கழகம் ஏதோ ஒரு சிலருக்குத் திடீர் என்று ஏற்பட்ட ஞானோதயத்தின விளைவோ, அல்லது முனிபுங்கவரின் வரம்பெற்றதனால் உண்டானதோ அல்ல, என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததொன்றாகும். கழகத் தலைவர் செய்தது கொள்கைக்குப் புறம்பானது என்று அஞ்சி, வேதனைப்பட்டு வெளியேறினோம் அதன் விளைவு இன்று எங்களிடையே ஒரு எழுச்சி, ஒரு முன்னேற்றம், ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது

இருபத்தைந்து ஆண்டுகளாக நாங்கள் செய்துவந்த அறிவுப் பிரச்சாரத்தின், சமுதாயப் பணியின் விளைவாக இன்று நாட்டிலே பூரிக்கத்தக்க மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. அரசியல் துறையிலே, பொருளாதாரத்துறையில் மக்களுக்குள்ள இழிவு போக்கப்பட்ட வேண்டும் என்ற கொள்கை, எங்கள் எழுச்சிக்குள்ளாக இருந்துவந்திருக்கிறது.

திறனற்ற ஆட்சி

வெள்ளையன் ஏகாதிபத்திய ஆட்சியில்கூட நாம் ஏதோ சற்று சுகமாய் இருந்து வந்தோம். அப்போது இவர்கள் கர்ஜித்தனர், எங்கள் ஆட்சியில்சுபிட்சம் ஏற்படும் என்று வெள்ளையன் வெளி ஏறினான், இன்று நாட்டில் நடப்பது என்ன, ஒரு வேளை சோற்றுக்கும் வழி இல்லை, உடை இல்லை, வெள்ளையன் காலத்தில் இல்லாக்கொடுமை. அன்றாடம் பெருகி வருகிறது அவர் ஆட்சிக்குப் பின், கடல் பொங்கி, ஊழித்தீபரவி, பூகம்பம் ஏற்பட்டு நாடு, நகரம், வயல் இவைஎல்லாம் அழிந்து போய்விடவில்லையே, பின் ஏன் நாடு இந்த அவல நிலையில் இருக்கிறது, என்று பொதுமக்கள் கேட்டால், காமராஜர் செல்லுகிறார், இந்த மூன்று வருடமாக உங்களை உயிருடன் வைத்திருக்கிறோமே அதுபோதாதா என்று இந்த நிலை எதை எடுத்துக் காட்டுகிறது தோழர்களே! அவர்களுக்குத் திறமையும் நல்லெண்ணமும் இல்லை என்று தானே 'அர்த்தம்".

அன்று காந்தி பஜனை.

இன்று பண்டிதர் பஜனை!

பேசிப்பூர் காங்கிரஸிலே நேரு சமதர்மத்தை மாஸ்கோ மணம் என்று பல படப்படாட்டிப்பேசினார். மேலும் நான் ஒரு தீவிர சோசலிஸட்வாதியென்றும் சொல்லிக் கொண்டார். கள்ளமார்க்கெட்காரர்களை எலக்ட்ரிக் கம்பத்தில் தூக்கிலிடவேண்டும், என்று துள்ளிக் குதித்தார். நல்ல கொள்கைதான் என்று நாம் மகிழ்ந்தோம், ஆனால் நிறைவேற்றினரா? இப்பொழுது பணமுடைகளுக்குப் பக்கபலம் தருகிறார். முதலாளிகளே, நீங்கள் வருமான வரியைச் செலுத்திவிடுங்கள், என்று வஞ்சகர்களிடம் கொஞ்சுகிறார். இப்படிப் போக்கு கூடாது என்று பண்டிதரைக் கண்டித்தால், கொதித்தெழுகின்றனர் காங்கிரஸ் தொண்டர்கள். பட்டேலைச் சொல்லுங்கள் பரவாயில்லை, ராஜேந்திரப் பிரசாத்துக்குச் செயலாற்றும் திறன் இல்லை என்று சொல்லுங்கள், ஒத்துக் கொள்கிறோம், பண்டிதரைச் சந்தேகிப்பதா என்று பதைக்கின்றனர். காந்தி பெயரைச் சொல்லிப் பிழைக்கவந்தவர்கள்தானே, காந்தியாரை ஒழித்துக்கட்டினார்கள், இன்றோ பண்டிதரின் பெயரைப் பெரிதாக்கிப் பிழைக்கின்றனர்!

உலகம் இருகூறுகப் பிரிகிறது. ஏகாதிபத்தியம் ஒரு புறம், பாட்டாளி மக்களின் எழுச்சிக் குரலுடைய பொதுவுடைமை ஒரு புறம். முன்னதற்கு அமெரிக்கா தலைமை வகிக்கிறது, பின்னதற்கு ரஷ்யா தலைமை வகிக்கிறது அன்று சமதர்மத்தைப்பற்றி சண்டப் பிரசண்டமடித்த நேரு, இன்று அமெரிக்கா சென்றதின் அர்த்தமென்ன? நேருவைப்பற்றித்தான் நாம் என்ன நினைப்பது?

புளுகும் படலம் ஆரம்பம்!

காஞ்சியில் காமராஜர் கதறுகிறாரும், ரஷ்யா, ரஷ்யா என்கிறார்களே, அங்கே, பசி, லஞ்சம், ஊழல் நிரம்பிக்கிடக்கிறது, ஆகையால், அவர்களிடம் நல்ல திட்டம் இல்லை. அதே போது கூறுகிறார், ரஷ்யாவிற்குள் ஒருவரையும் அனுமதிப்பதில்லையாம். பின் இவர் ரஷ்யாவைப்பற்றி எப்படித்தான் தெரிந்து கொண்டாரோ தெரியவில்லை! பத்து வருடமாகத் தலைமறைவாய் இருந்த சுப்பையாவிற்கு அரசியல் சபலம் தட்டியிருக்கிறது. அத்தகையோர் கூறுகின்றனர் அண்ணாதுரை அவர்களுக்கு மந்திரிப்பதவி கொடுத்தால் மூன்று தினங்கள் கூட நிர்வாகிக்க முடியாதாம். மூன்று நாளென்ன முதல் நாளிலேயே போட்டு விடுவாரே திட்டம், மாகாண சர்க்காரின் வரிப் பணம் மத்திய சர்க்காருக்குப் போகக்கூடாது என்று. இதற்கெல்லாம்காரணம் 1951-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் நெருங்குகிறது. நாற்காலிப் போராட்டம் துவக்கவேண்டியநிலையில் இருக்கிறார்கள், ஆகையால் புதிய புளுகுகள் தேவைப்படுகின்றன. முன்பு கூறினாரே சத்தியமூர்த்தி வரி இல்லாத ராமராஜ்யம் ஏற்படுத்துவோம் என்றும், பாலும் தேனும் கலந்தோடும் என்றும் அந்த வாய் ஜாலம் பலிக்காது மக்களிடம் இன்று.

காங்கிரசாரின் தாரக மந்திரம்

நாங்கள் கேட்பதும், அரசியல், சமுதாய பொருளாதார் விடுதலை, தேர்தலில் நின்று பதவி வேட்டையாட அல்ல. பாசிசம் ஒழிந்து ஜனநாயகம் பூக்கவேண்டும் பலாத்காரம் காரணங்காட்டி கம்யூனிஸ்ட்டைத் தடை செய்துள்ளார்கள். அதே போல், தி. மு. கழகத்தைத் தடை செய்ய இயலாது, முடியாது. இரண்டிற்கும் மாறுபாடு உண்டு என்றாலும், சட்ட விரோதம் செய்ததைக் கண்டு வருந்துகிறோம். மக்கள் பாலம் போடவில்லையே என்று பக்தவத்சலத்தைக் கேட்டால், நாங்கள் மடையர்கள் என்று எண்ணி அவர் அதற்குப் பதில் சொல்லுகிறார், மதுவிலக்கு என்று. மாதவமேனனைக் கல்விக்கூடம் இல்லையே என்றால் அதற்கும் மதுவிலக்கு என்கிறார். தொழில் மந்திரியை ஆலை கேட்டால் அதற்கும் அவர் மதுவிலக்கு என்கிறார். நிதி மந்திரியைக் கேட்டால் மதுவிலக்கு! எதற்கும் மதுவிலக்கைத் தாரகமந்திரமாகக்கொள்கிறார்கள்.

காந்தீயம் கரைக்கப்பட்டது!

பாடுபடவேண்டிய சமுதாயம் தரவேண்டியது வியாபார வரி- இந்த வரியையே முதலாளிகள் வருமான வரியாகக் கட்டிவிடுகின்றனர். இதனால் முதலாளித்துவம் குதிரை ஏறுகிறது. இதற்கு அரசாங்கம் தாழ்ந்துகொடுக்கிறது வேறு எந்த நாடுகளிலும் இவ்வாறு இல்லை. இங்கு எந்த நல்ல திட்டம் இருக்கிறது. காந்தி நிர்மாண திட்டம் இருக்கிறதா, காந்தியைத் தான் கொன்றே விட்டார்கள். இனி ஒரு நல்ல எண்ணம்கூட இருக்கக்கூடாது ஒருவரிடமும் என்ற நம்பிக்கையினால் தான், காந்தியின் அஸ்தியை ஊர்ஊராக ஆற்றில் கரைக்கும்படி செய்தார்கள். இருக்கும் நல்ல கொள்கை எல்லாம் ஆற்றோடு கரைந்துபோய் விடட்டும் என்ற நம்பிக்கைத் தானோ என்னவோ! யார் கண்டார்கள். (அன்றோடே காந்தியின், அகிம்சை, சத்தியம், அன்பும், எஞ்சி இருந்த எல்லாவற்றையும் கரைத்துவிட்டார்கள்) இனி காந்தியாரின் பெயரைச் சொல்லி வெகுகாலம் வாழ்ந்துவிட முடியாது. வஞ்சகத்தை நெஞ்சிலே ஏற்றி கொள்ளாத காங்கிரஸ் வாலிபர்களுக்குக் கூறுகிறேன். நேர்மை, நியாயம் உள்ளவர்களுக்கு அங்கு இனி இடம் இல்லை. காமராஜர், சுப்பையா அதில் இருக்கலாம். அவர்களுக்கு அதுதான்வேலையோக்கியமாக, நாணயமாக திட்டம் திட்ட, உணவு உற்பத்தியைப் பெருக்க வக்கில்லை! ஆண்டிமடம் அண்டவேண்டியவர்கள், ஆட்சிபீடம் ஏற அருகதை உள்ளவர்களாவார்களா?

அங்கே இடமில்லை,

இங்கே வாருங்கள்!

ஆகவே தோழர்களே, சமன் செய்து சீர்தூக்கி ஓர் முடிவிற்கு வாருங்கள். இனி காங்கிரஸில் வேலை இல்லை. நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய இருக்கிறது, செய்து வருகிற தி. மு. கழகத்தின் மூலம் நாட்டுப்பணிபுரிய வரும்படி எஞ்சியுள்ள காங்கிரஸ் தோழர்களை அழைக்கிறேன்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் கடிதங்கள் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர் 'மாலைமணி'

தி. மு. க. திறப்பு விழா

எட்டுகுடி, நவ. 21—

19-11-49 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு எட்டுகுடி திராவிட முன்னேற்றக் கழகத் தொடக்க விழா, திருவாரூர் டாக்டர் விஜயராகவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு, வாட்டாகுடி, திருக்குவளை, திருக்காரவாசல், நத்தபள்ளம், சித்தாய்மூர் முதலிய இடங்களில் இருந்து ஏராளமான மக்கள் வந்து கூடி இருந்தனர். வாட்டாகுடி தோழர் கே. முகமது அலி அவர்கள் எட்டுகுடி தி. மு. க. வளர்ச்சிக்காக 101 காலணாக்கள் நன்கொடையாக அளித்தார்.

கோ. இராதாமணாளன்

பின் நாகை தோழர் கோ. இராதாமணாளன் கொடியேற்றி வைத்துப் பேசும்போது, "நாங்கள் பெரியார் தலைமையிலிருந்து பிரிந்தபோதும், அவருடைய இலட்சியத்தையும் கொள்கைகளையும் எங்களுடனேயே எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். இளைஞர்களாகிய எங்களிடத்தில் இயற்கையான உணர்ச்சியும், உற்சாகமும் இருக்கின்றன. இன்று ஏற்றி வைக்கப்பட்டுள்ள கொடியின் மறுபாதி கறுப்பு, சிவப்பாக மாறும்வரையில் தீவிரமாகப் பணிபுரிவோம்" என்று சுமார் ஒரு மணி நேரம்பேசினார்.

டி. கே சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் பேசியபேச்சின்சுருக்கம்:- இதே எட்டுகுடியில் முன்பு காவடிச் சிந்து பாடக் கேட்டிருக்கின் காவடிச் சிந்துக்கள் பந்தர்களையும், பஜனை மடங்களையும்தான் இந்த எட்டுக்குடி உண்டாக்கியது. பக்தி ஏற்பட ஏற்பட பசியும் வறுமையும்தான் ஏற்பட்டது பின் அதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்தோம். காவடிச் சிந்து கட்ட பொம்மு காவியமாக மாறிற்று. உடனே காங்கிரசும் தேசியமும் உண்டாயின. இருந்தும் வறுமையும், கொடுமையும், காவடிச் சிந்தும், கட்டபொம்மு காவியமும் ஏய்த்துப்பிழைப்போர்வாழ பயன்பட்டதே தவிர மலர்ந்தா உதவவில்லை. ஆகையால்தான் சுயசிந்தனை, தன்னம்பிக்கை, விடாத உழைப்பு, பகுத்தறிவு இவற்றில் நம்பிக்கை வைத்து வாழ மக்களைக் கேட்டுக்கொள்கிறோம். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் என்பதை விளக்கிப்பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு தி. மு. க. செயலாளர் சி. சுப்பையா நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது. (சி. உ.)

தஞ்சை மாவட்டத்தில் நெல் சாகுபடி

தஞ்சை மாவட்டத்தில் இப்பருவ குறுவைச் சாகுபடியில் ஏறத்தாழ கால்பகுதி கட்டை விழுமென்று கூறப்படுகிறது ஒரு லட்சம் டன் நெல் எதிர்பார்த்ததில், இப்போது சுமார் 75,000 டன்னே அறுவடை போகலாமெனக் கருதப்படுகிறது. காலத்தில் மழையில்லாமையும், வேண்டாத காலத்தில் மழையுமே இப்படி 'கட்டை' விழுந்ததற்குக் காரணமெனத் தெரியவருகிறது. இப்போதைய சம்பா விளைச்சலுக்கு மேலும் மழை அவசியமென்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

26—11—49

தாராபுரம் :—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, பி. பழனிச்சாமி, என். இ. பாலகுரு
பொன்மலை :—	க. அன்பழகன், டி. கே. சீனிவாசன்.
வந்தவாசி :—	கே. ஏ. மதியழகன், மா. இளஞ்செழியன்

27—11—49

இராமநாதபுரம் (கோவை) :—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, பி. பழனிச்சாமி என். இ. பாலகுரு.
திருச்சி :—	(காலை) க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம்.
நீடாமங்கலம் :—	(மாலை) டி. கே. சீனிவாசன், கே. கே. நீலமேகம், மு. கருணாநிதி
திண்டுக்கல் :—	என். வி. நடராசன், என். முத்து.
திமிரி :—	சி. பி. சிற்றரசு.
பொட்டல்புதூர் :—	கே. வி. கே. சாமி.
வேலூர் :—	கே. ஏ. மதியழகன். (தி. மு. கழகக் கூட்டம்)
மானாமதுரை :—	சி. என். அண்ணாத்துரை.
சோழவந்தான் :—	ஈ. வெ. கி. சம்பத், எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

அசோகர் ஸ்தூபி ஆந்திரர் அல்லலைக் களையட்டும்!

—————:0:—————

ஸ்தூபியைப் பணமாக்கிப் புயல் நிவாரணத்துக்குதவுக !

பண்டித நேருவுக்குப் பிறந்ததினப் பரிசாகப் பம்பாய் காங்கிரசின் சார்பாக அளிக்கப்பட்ட விலையுயர்ந்த அசோக ஸ்தூபியைக் காங்கிரஸ் மாளிகை அல்லது பொருட்காட்சி சாலைபோன்ற விடங்களில் புழுதிபடும்படி வைத்து, அதன் பெருமை குன்றும்படி செய்வதைவிட, அதனை ஏலம் போட்டு அதனால் கிடைக்கும் பொருளை ஆந்திரநாட்டுப் புயல் நிவாரண நிதிக்குக் கொடுப்பதே சிறந்த முறையென்று நமது தென்னிந்திய வாசகர்கள் கருதுகிறார்கள்.

எனவே, தனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட அசோக ஸ்தூபியை ஏலம் போட்டு அதனால் கிடைக்கும் பொருளை ஆந்திர புயல் நிவாரணநிதிக்கு அளிக்குமாறு பண்டித நேரு பம்பாய் மேயர் தோழர் பட்டீலுக்கு ஆணையிடுவாரா என்று கேட்கிறோம்.

அப்படிச் செய்யப்படுமானால் அதுவே பண்டித நேரு அவர்களின் பிறந்ததினத்தைச் சிறப்பாகக் கொண்டாடியவர்களாவோம்.”

—பிளிட்ஸ்

காஷ்மீர் பற்றி ஐ. நா. வாதம்

ஐ. நா. காஷ்மீர்—கமிஷன் தான் கண்டறிந்த தகவலடங்கிய அறிக்கையை ஐ. நா. பாதுகாப்பு சபையில் டிசம்பர் மத்தியில் சமர்ப்பிக்குமெனத் தெரிகிறது. டிசம்பர் மத்தியில் நடக்கும் ஐ. நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் ஷேக் அப்துல்லாவும் கலந்து காஷ்மீர் சார்பில் விவாதிப்பாரெனத் தெரிகிறது.

———

அரசியலார் கைவிரிப்பு !

சென்னை, நவ. 22—

நகரில் சாக்கடை திட்டங்களுக்கு அதிகப்படியான பணம் தேவை என்று சென்னை நகராண்மைக் கழகம் அரசியலாரைக் கேட்டிருந்தது. அதற்கு அரசியலார் அளித்துள்ள பதிலில் தற்போதைய பணமுடையால் நகராண்மைக் கழகத்துக்கு அதிகப்படியாகக் கடன்தர இயலாதென்றும், இத் திட்டத்தைக் கைவிடாவிட்டாலும் மெள்ள நடத்துவது நலம் என்றும் கூறியுள்ளனர்.

கள்ளமார்க்கெட்-கொள்ளைலாபக்காரரே “ராமராஜ்யத்தின்” சூத்திரதாரிகள் !

கிரிமினல் குற்றவாளிகள் கையில் மந்திரிசபையா?

கிழக்குப் பஞ்சாப் முன்னாள் பிரதமர் தரும் தகவல்

‘ராம ராஜ்யத்தில்’ உண்மையான ஆட்சிபடைப்பாளர்கள் யாரென்பதை இன்னும் பெரும்பாலோர் அறியவில்லையென்றே தெரிகிறது. மாகாணங்களில் நடக்கும் அரசியல் கூத்துக்களையெல்லாம் கவனமாய்ப்பின்பற்றிவருவோருக்கு நன்கு தெரியும். கள்ளமார்க்கெட்காரரும் கொள்ளைலாபக்காரருமே நாட்டில் ஆட்சி படைப்பாளராகத் திகழ்கிறார்களென்பதை. சமூக விரோதிகளின் ‘செஸ்—போர்டாக’ விளங்குகின்றன மாகாணங்கள்.

காங்கிரஸோ, மத்தியபார்லிமெண்டரிபோர்டோ நியமித்த நபர்களால் மாகாண ஆட்சி நடைபெறவில்லை. கள்ளமார்க்கெட் - கொள்ளை லாபக்காரர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலேயே மாகாண ஆட்சி நடத்தப்பெற்றுவருகிறது இத்தகைய சமூக விரோதிகளின் கோரிக்கைகளையேற்று நடக்க மறுக்கும் மந்திரிகள்ஒழித்துக்கட்டப்பட்டு, வேறு ‘தாசானு தாசர்கள்’ கொண்டுவந்து புகுத்தப்படுகின்றனர்.

பித்தலாட்டக்காரரின்அரசியல் சூதாட்டத்தின் அண்மைய நிகழ்ச்சிதான் (கிழக்குப் பஞ்சாப்) தோழர் பீம்சென் சக்காரின் வீழ்ச்சி, லஞ்ச ஊழல்,பதவிவேட்டை, சுற்றத்தார் பாரபட்சம் இன்னபிறவற்றைக் கடிந்து, களைந்து வந்தார் தோழர் சக்கார்.சமூகபொருளாதாரவாழ்வில்புகுந்துவிட்ட இத்தொத்து நோயை விரட்டுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். உடனடியாக கிழக்குப் பஞ்சாப் காங்கிரஸ் சட்டசபைக கட்சி தோழர் சக்காருக்கு அனுப்பிவந்த ஆதரவை நிறுத்திக்கொண்டு, தனக்கேற்ற இன்னொருவரைக் கொண்டுவரலாயிற்று

தன ராஜிநாமாவுக்குப்பின் உடனடியாக தோழர் சக்கார் விடுத்த அறிக்கையொன்றில், ‘சட்டசபையில் எனக்கு மாறாக வேலைசெய்துவரும்உறுப்பினர்களில், சுமார், 12 பேர்களாவது நேரடியாகவோ, மறைமுகமாகவோ கிரிமினல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருப்பவர்களாவர் இவர்களும் இவர்கள் சுற்றத்தாரும் பதவி வேட்டை லஞ்ச ஊழல் மிக்கவர்களுமாவர்”

என்று குறிப்பிட்டுள்ளார். தோழர் சக்கார் மேலும் குறிப்பிட்டதாவது: லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக கிரிமினல் கோர்ட்டில் கண்டிக்கப்பட வேண்டியவர்களின் பாதுகாவலராக தோழர் கோபிசாந்த் பர்காவா (இப்போதைய பிரதமர்) முன்வந்துள்ளார்.”

காங்கிரஸ் சட்டசபைக் கட்சி உறுப்பினர்களின் மீதுள்ள இத்தகைய மோசமான குற்றச்சாட்டுகள் விசாரணைக்கு வருமே யென்றுகூட பயத்தைக்காணோம்.சென்னை, மேற்கு வங்கம், ஐக்கிய மாகாணம் பற்றிய செய்திகள் அவர்களுக்குத் தெரியாதா, என்ன ?

இவ்வண்ணம் காங்கிரஸின் வேஷம் ‘அப்பட்டமாகக்’ கலைந்து நிற்கிறது. காங்கிரஸ் ஆட்சியின்கீழ் மக்கள் எத்தகைய நன்மையையும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. மாறாக, அவர்களது துயரந்தான் உயரப்போகிறது.

—‘பிளிட்ஸ்’

வயதுவந்தோர் வாக்குரிமை மூலம் முதல் தேர்தல்

ஐதராபாத், நவ. 23—

1950ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஐதராபாத் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடைபெறும். இத்தேர்தல்வயது வந்தோருக்குள்ள வாக்குரிமை அடிப்படையிலேயே நடைபெறும் தேர்தல் இந்தியாவில் இதுவே முதல் தேர்தலாகும். இதனால் ஐதராபாத்துக்கு ஒரு தனிப் பெருமையும், சமஸ்தானத்தில் ஜனநாயகம் நிலைபெற ஒரு நல்வாய்ப்பும் ஏற்படும் என்றும் அண்மையில் ரேடியோவில் பேசிய தேர்தல் கமிஷனர் தோழர் எஸ். டபிள்யூ சிவேஷ்வார்கர் குறிப்பிட்டார்.

1949 டிசம்பர் முதல் தேதி தேர்தல் பட்டியல் பிரசுரிக்கப்படும். இத் தேர்தல் பட்டியல் பிரசுரிக்கப்பட்ட பின் 30 நாட்களுக்குள் உரிமைகள், மறுப்புகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். இவை ஆராயப்பட்ட பின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படுமென்று தெரிகிறது.

‘சீன நடப்பையுணர்ந்தோர் இப்போலிகளைப் பிரதிநிதிகளாக யேற்பரா?

———;0:———

மக்கள் குடியரசே சட்டபூர்வமான சர்க்கார்

ஐ. நா. வில் இப்போதுள்ள சீனத் தூதுக் குழுவை சீன மக்களின் பிரதிநிதித் தூதுக்குழுவாக ரஷ்யா ஏற்றுக்கொள்ளாது என்று சோவியத் அயல் நாட்டு மந்திரி தோழர் விஷின்ஸ்கி 23-ந் தேதியன்று ஐ. நா. பொதுச் சபையில் குறிப்பிட்டார்.

தற்போதைய கூமின்டாங் (தேசியக்கட்சி) தூதுக் குழு சீன மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்று சீனக் கம்யூனிஸ்டுகள் கடந்த வாரம் ஐ. நாவுக்கு அறிவித்தன. சோவியத் யூனியன் ஆதரிப்பதாக விஷின்ஸ்கி தெரிவித்தார்.

அணுசக்தி மீது விவாதம் தொடருவதற்கு முன்னர் இவ்வறிக்கையை வெளியிட்டார் விஷின்ஸ்கி.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: சீனாவின் சட்ட பூர்வமான சர்க்கார் ‘இப்போலித் தூதுக்குழுவை’ பிரதிநிதித்துவமற்றதெனக் கூறிவிட்டது. பின்னும் ஏன் தயக்கம்? சீனாவின் நடப்பை நன்கு உணர்ந்திருப்போர், இப்பொம்மைகளைப் பிரதிநிதிகளென்று கொள்வார்களா வென்று கேட்கிறேன். ‘சீன மக்கள் குடியரசு’ முழுவதிலுமுள்ள மக்களின் உண்மையான சட்ட பூர்வமாக பிரதிநிதித்துவம் ‘சீனமக்கள் குடியரசு சர்க்காரே’ என்பதில் சிறிதும் ஐயமில்லை”.

தோழர் விஷின்ஸ்கி இப்படிச் சொல்லி அமர்ந்தும் தலைவர் ஜெனரல் ரோமுலோ, சீனா பற்றிய விவாதம் இப்போது வேண்டாமென்றும், அணுசக்தி பற்றிப் பேசுங்கள் என்றும் குறிப்பிட்டார்.

எது பெருகுகிறது, உணவு உற்பத்தியா, அதிகாரி உற்பத்தியா?

மக்கள் குறையை ஒப்புகிறார் கமிஷனர் !

லக்னோவில் கடந்த வாரம் பத்திரிக்கை நிருபர் மாநாடொன்றில் பேசிய உணவு உற்பத்தி மத்திய கமிஷனர்; தோழர் ஆர். கே. பட்டீல் தன்னையுமறியாமல் ஒத்துக்கொண்டிருக்கும் சில அம்சங்கள் நம் கவனத்துக்குரிய குறிப்பிடத்தக்கவைகளாகும். அவர் கூறினார்:

1. சர்க்கார் மாட்டு மக்களின் போக்கு இப்படி இருக்கிறது. ‘நீங்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கவில்லை, அதிகப்படியான அதிகாரிகளைத்தான் உற்பத்தி செய்கிறீர்கள்

2: இன்றைய கேவலநிலைக்கு மற்றுமொரு முக்கிய காரணம் ‘சிவப்பு நாடா’ வாகும்.

டிபார்ட்மென்ட்களின் இயல்பான ஆமை வேகம் தொடர்ந்திருந்து வருகிறது. உணவு உற்பத்தித் திட்டங்கள் பயன்தராததற்கு இதுவே காரணம்.

4. ‘உணவு உற்பத்திப் பெருக்கத்திட்டத்துக்கு அளவு கடந்த பணத்தை சர்க்கார் செலவிட்டும், முன்னேற்றம் மிக மிகக் குறைவாகவே யுள்ளது.

கண்டிக்கப்பட வேண்டிய கட்டண உயர்வு

"நகரில் டிராம் கட்டணங்களை உயர்த்த டிராம்வே கம்பெனியார் உத்தேசித்திருப்பதை இந்தக் கவுன்சில் பலமாகக் கண்டிக்கிறது. டிராமில் மத்திய தர வகுப்பினரும், ஏழை மக்களுமே பிரயாணம் செய்வதால் அவர்களை இக்கட்டண உயர்வு மிகவும் பாதிக்கும் என்று இக்கவுன்சில் கருதுகிறது"

என்னும் அவசரத் தீர்மானம் ஒன்றை நகராண்மைக் கழகக் கூட்டத்தில் கொண்டுவரப் போவதாகத் தோழியர் திரிபுரசுந்தரி அம்மையார் நோட்டீஸ் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அம்மையாரின் தீர்மானம் வரவேற்கப்படவேண்டியதே. நகரசபை இவ்விஷயத்தில் அக்கறை காட்டி தீர்மானத்தை நிறைவேற்றி வைக்கும் என நம்புகிறோம். டிராம்வே கட்டண உயர்வை நகர மக்கள் சார்பில் கண்டிக்கவேண்டியது நகரசபையின் இன்றியமையாக் கடமையாகும்.

தோழியர் திரிபுரசுந்தரியார் குறிப்பிடுவதுபோல் இக்கட்டண உயர்வால் பொதுவாக நடுத்தர வகுப்பினரும் சிறப்பாக ஏழை மக்களுமே பாதிக்கப்படுவார்கள். இந்தக் கட்டண உயர்வு எந்த வகையில் பார்த்தாலும் பொருந்தாததாகும். டிராம்வண்டிப் பிரயாணத்தால் மக்களுக்கு கஷ்டங்கள் நேருவது தான் இயல்பாக இருக்கிறதேயன்றி வசதிகள் ஏதும் கிடையாது. போய்ச் சேரவேண்டிய இடத்துக்குச் சீக்கிரமாய்ப் போய் சேரவோ, வசதியாக அமர்ந்து செல்லவோ முடியாது. பழைய காலங்களில் இத்தகைய தொல்லைக்கு எல்லையே கிடையாது ஆனால் இந்நிலையில் டிராம்வே கம்பனியின் வருவாயோ நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. வருவாய் உயர்வுக்கேற்றபடி மக்களுக்கு வசதி செய்து கொடுக்காமல் கம்பெனியார் வண்டிகளைப் பழுதுபட்ட நிலையிலேயே இன்னமும் வைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, கட்டண உயர்வு எல்லோராலும் கண்டிக்கப்படவேண்டியதே.

திபேத்மீது படையெடுப்பா ?

திபேத்மீது சீன கம்யூனிஸ்டுகள் சீக்கிரமே படையெடுக்கலாம் என்று சில விமர்சகர்கள் கருதுகின்றனர்.

திபேத சர்க்கார் 20,000 பேர்களைத் திரட்டவும் கோவேறு கழுதைகளைக் கணக்கெடுக்கவும் ஆரம்பித்திருப்பதாக டெய்லி மெயில் நிருபர் காலிம்பாங்கிலிருந்து தெரிவிக்கிறார்.

இப்பொழுது திபேத் ராணுவத்தில் 8000 பேர்களும் 13,000 ரிஸர்வ் துருப்புகளும் இருக்கின்றனர் என்றும், ஒரு சிறு பிரத்திப் படை இருப்பதாகவும் இவர் கூறுகிறார். திபேத்திலுள்ள ககைகா சபை தளமாக மாற்றப்பட்டு வருகிறது.

சீன கம்யூனிஸ்டுகள் திபேத்தின் வடமேற்கு எல்லைகளை சமீபித்திருக்கின்றனரென்று தெரிகிறது.

'பழைய :: :: பெத்தானே'!

'வயது வந்தோர்க்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கும் ஒரு அம்சத்தைத் தவிர, இந்தியாவின் புதிய அரசியல் 1935-ம் வருடத்திய இந்திய சர்க்கார் ஆக்டின் மறுபதிப்பேயாகும் !

—டாக்டர் தேஷ்முக்
22—11—'49

ஜனநாயகத்துக்கு...

— [1-ம் பக்கத் தொடர்ச்சி]—

கார் வல்லுநர்களும் அதிகாரிகளுமாகப் பெரும் பட்டாளமொன்றைத் திரட்டி வைத்திருப்பது 'ஒரு பெருந் தமாஷாகும்' நல்லெண்ணம், நம்பிக்கையே இன்று பெரிதும் தேவைப் படுகிறது. பிரிட்டிஷ் சர்க்கார் 1942-ல் (போர்க் காலத்தில்) ஆடவரும் பெண்டிருமடங்கிய பெரும் 'இராணுவம்' ஒன்றைத் திரட்டி, விவசாயவேலைகளில் ஈடு படுத்தியது. இது காரணமாக, 40 லட்சம் ஏக்கர்கள் புதிதாக சாகுபடிக்குக் கொணரப்பட்டன. இந்திய சர்க்காரும் இதனையேன மேற் கொள்ளக் கூடாது?

அயல் நாடுகளில், நமது அரசுப் பிரதிநிதிகளாகவும், ஹைகமிஷனர்களாகவும் அமர்ந்திருப்போர் எவ்வளவு கோலாகல வாழ்வில் ஈடுபட்டிருக்கின்றனரென்று தொடர்ந்து குறிப்பிட்டார் டாக்டர் லோகியா. இந்தியாவின் நிலைபடு மோசமாக இருக்கையில் இந் நாட்டு மக்கள் பட்டினி—பசி—துயரங்களால் வாடி வதங்குகையில், அயல் நாடுகளிலுள்ள நமது பிரதிநிதிகள் கோலாகல வாழ்வில் ஈடுபட்டிருக்கிறார்களென்றால், சர்வதேச அரசியலரங்கில் இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்திருக்கிறது என்று கூறுதல் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானா? நமது பிரதம மந்திரி நேரு நியூயார்க்கில் மிகமிக விலையுயர்ந்த ஆடைகள் தரித்து ஆடம்பரமாகத் திகழ்ந்திருக்கிறார். இந்தியாவின் ஏழ்மைக்கு ஏற்றது தானா இது என்று கேட்கிறார் டாக்டர் லோகியா.

தரித்திர நாராயணர் என்றும், பாட்டாளி மக்களின் பாதுகாவலரென்றும், ஏழையர் துயர் களைய வந்த தீரர்களென்றும் தங்களைத் தாங்களே பறைசாற்றிக்கொண்டு வந்த தேசியத் தோழர்களின் வேஷம் கலைந்துவிட்டது, உண்மையான உருவம் வெளிப்பட்டுவிட்டது! தங்கள் தூய்மைக் குறைவு—பிற்போக்குத் தன்மை மக்கள் மன்றத்தில் எள்ளி நகையாடப்படுகிறது என்பதை உணர்ந்த நிலையிலும், ஏதேதோ சப்பைக் கட்டுகள் போடப்பட்டு வருகின்றன! மக்கள் எழுச்சிக்கு முன்னர் சரியக்கூடிய இச் சப்பைக்கட்டுகள் எம் மாத்திரம்?

இனி நடப்பவை

நீடாமங்கலம்—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம், 27-11-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு நடைபெறும். அதுபோது, தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் தோழர்கள் மு. கருணாநிதி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

* * *

பொன்மலை— பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் 26-11-49 சனி மாலை 6-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் ஜி பராங்குசம் தலைமையில், தோழர்கள் கே அன்பழகன் எம் ஏ; டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

* * *

திருப்பத்தூர்—இவ்வூர் தி.மு க கிளையின் செயற்குழுக் கூட்டம் 27-11-49ஞாயிறு காலை 10மணிக்கு, தருமராஜா கோயில் தெரு, தோழர் கே. ஜெயராமன் அவர்களின் கட்டிட மாடியில் நடைபெறும். அதுபோது சில முக்கிய பிரச்னைகள் பற்றி ஆலோசிக்க இருப்பதால் செயற்குழுவினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சோழவந்தான்—இவ்வூர் தி மு. க. கிளையின் துவக்க விழா, 27-11-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு, வைகையாற்று மணலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் ஈ. வி கே. சம்பத், இரா. சு தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

களம்பூர்— இவ்வூர் தி. மு. க. கிளையினுடையவும், இரவுப் பள்ளியினுடையவும் துவக்க விழா, 27-11-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் ச. மொ. அண்ணாமலை தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர் சி. பி சிற்றரசு அவர்களும் மற்றும் பலரும் பேசுவர்.

• • •

திருச்சி-திருச்சிமாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டின் வரவேற்புக்கழகக் கூட்டம் 27-11-49 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் அதுபோது மாநாட்டுத்தலைவர், தேதி முடிவு செய்ய வேண்டியிருப்பதால் வரவேற்புக் கழகத்தினர் அனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

இராமநாதபுரம் (கோவை)—இவ்வூர் தி.மு க. கிளையின் துவக்கவிழா 27-11-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு தோழர் ஆர். கே. சடையப்பன் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; ஈரோடு தமிழாசிரியர் சி. என். இரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

கிருஷ்ணகிரி—இவ்வூர் தி.மு.க. கிளையின் சார்பில் 12-12-49 அன்று மாலை கார்னேஷன் ஹால் மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி என், அண்ணாத்துரை எம். ஏ; அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சிதம்பரம்—இந்நகர் தி.மு.க. கிளையின் செயற்குழுக்கூட்டம்,27-11-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோவில் தெரு 3 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும் அதுபோது பல முக்கிய பிரச்னைகள் ஆலோசிக்கப்படும். செயற்குழுவினரனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

திருச்செங்கோடு—27-11-49மாலை 4 மணிக்கு, இவ்வூர் தி மு.க. கிளை சார்பில் வழக்கப்படி நடக்கும் சொற்பயிற்சிக்கூட்டம், வைத்திய சாலை மாடியில்நடைபெறும். 'கல்வி' என்ற பொருள் பற்றி சொற்பொழிவு நடைபெறும்.

* * *

வேலூர்—இவ்வூர் தி.மு.க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் ஒன்று 27-11-49 மாலை 4மணிக்கு, காலாஸ் அஸ்தகிரி வீதியில் நடைபெறும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

மாணம்பதி—காஞ்சிபுரத்தையடுத்துள்ள மாணம்பதி தி மு. க. கிளையின் துவக்க விழா 27-11-49 அன்று தோழர் ஆ. பசுபதி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

• * *

வந்தவாசி—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 26-11-49 சனி மாலை 5-30 மணிக்கு, இவ்வூர் யூனியன் ஆபீசுக்குப் பின்புறமுள்ள மைதானத்தில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, தோழர் ஈ. தங்கவேலர் அவர்கள் தலைமையில் தோழர்கள் மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விமானம் கட்ட இலங்கை மரம்

ஆஸ்திரேலியா, மெல்போர்னிலிருக்கும் விமான தொழிற்சாலை, இலங்கையிலிருந்து பல்ஸா என்னும் மரங்களை விலைக்கு வாங்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த பல்ஸா மரங்களை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடியவர்களைப்பற்றி இதுவரையும் எத்தகவலும் கிடைக்கவில்லை.

குறைந்தபட்சம் 3 அடி சுற்றளவுள்ள மரங்களே தேவைப்படுகிறதென்று கூறப்படுகிறது. ஒரு கன அடி பல்ஸா மரத்தின் விலை 2 சிலிங் 6 பென்ஸ் என்று கூறப்படுகிறது. பல்ஸா மரம் பாரத்தில் மிகவும் குறைந்ததெனினும் மிகவும் பலம்வாய்ந்ததென்று கூறப்படுகிறது. விமானங்களைத் தயாரிப்பதற்கு பல்ஸா பலகை உபயோகிக்கப்படுகிறது. பல்ஸா மரம் ஒரு வருடத்தில் 70-80 அடி உயரம் வரையில் வளருகிறது.

தென் கன்னடத்துக்கு ஜாக் நீர்வீழ்ச்சி 'சக்தி'

தென் கன்னடம் மின்சார வசதித்திட்டத்துக்குப் பயன்படுமா வகையில் ஜாக் நீர் வீழ்ச்சியினின்றும் சக்தியைத் திரட்டிக்கொள்ள அனுமதி யளித்து சென்னை சர்க்காருக்கு மைசூர் சர்க்கார் சம்மதம் தெரிவித்துள்ளது. விரைவில் இதற்கான 'லைசென்ஸ்' போடப் பெறுமென அறியப்படுகிறது. 6,000 கிலோவாட் வரை இந் நீர்வீழ்ச்சியினின்றும் சக்தி திரட்டிக்கொள்ளலாமெனத் தெரிகிறது.

சந்தித்துப் பேசினராம்

சோஷலிஸ்ட்கட்சித் தலைவரும் அனைத்திந்திய தபால் சிப்பந்திகள் யூனியன் தலைவருமாகிய தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண் 23-ந் தேதி மாலை இந்தியப் பிரதமர் பண்டித நேருவை சந்தித்துப் பேசினாராம். சம்பள வார்த்தையின் போது போக்குவரத்து இலாகா மந்திரி ரபி அகமது கித்வாயும் கூட இருந்தாரெனக் கூறப்படுகிறது.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

உதகை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

SUNDAR TUTORIAL COLLEGE
56, Bazaar Road,
Saidapet, Madras-15.

Coaches Students for Inter, S. S. L. C. and Matric examinations. Efficient Coaching-Moderate charges. Sundar stands for sure success.

Apply sharp — Principal.

வெளிவருகிறது !

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர் : C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு :—

"மாலை மணி" பதிப்பகம்,
சென்னை—1.

நற்செய்தி !

1950-ம் வருடத்திய காலண்டர்

திராவிட இயக்கத் தலைவர்களின் உருவமைந்த கண்கவர் வண்ணப் படங்களுடன் வெளிவருகிறது !

விலை விவரம் பின்னர்

விவரங்கட்கு :

திராவிடன் பதிப்பகம், P.B. 18, வேலூர் (வ. ஆ.)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1.